# HARTLEY COLLEGE

FIAT LUX

## PAST PUPILS ASSOCIATION - COLOMBO BRANCH

# NEWS LETTER

Newsletter of Hartley College
Past Pupils' Asociation - Colombo Branch
Vol- 5 No - 01 20 June.2008

EDITOR : Mr.K.K.Canagherajah
( former District Manager, BOC) Telephone : 2360001
Address : 10/4, Rudra Mawatha, Colombo 06

LET THERE BE LIGHT

# EDITORIAL

## College performance at G. C. E. A/L & O/L Examinations & impetus for children in Computer Technology

It is heartening to note that the results released recently of the O/L prove the ingenuity of the students in the Jaffna Peninsula, although the atmosphere prevailing in the North is not at all conducive to studies. The results revealed on the overall they have performed far better than their Southern brethren. The feat is even more significant when considered in the light of the facilities granted to one section which had been deprived to the other. Even the text books have not been supplied to the Jaffna students. Sheer dedication, commitment to work, determination to whatever being pursued are some of the salient features in the story of success of students. Results of the examinations appear elsewhere in this publication.

The fact that due recognition is not given to merit but on other considerations could be felt in the deteriorating standards in Health, Engineering, and University standards etc. Thus even the chaotic conditions prevailing in the Government Hospitals is a direct result of not recognizing merit in the admissions. The medical graduates passing out are unable to diagnose the disease of the patients and are unable to keep pace with development in the West due to their lack of understanding of English and the patients having to suffer for this malady. The West is advancing in leaps & bounds but the developing countries are far behind in reaping the benefits of advancement in Science & Technology, vis-a-vis Medical Science. Advancement of Science & a sound knowledge English are inseparable. Even in the nearby India & Singapore very high standards are maintained in Medicine Engineering & Information Technology, to the extent the American Entrepreneurs grab the I/T qualified personnel from India to their companies in America.

The present youngsters of Hartley domiciled in Colombo have shown a prowess for computer technology which according to Bill Gates will be the forerunner in the years ahead, when everything will be computerized in most of the countries. Lots of the present day generation from the North, now living at Colombo, are excelling in this field. It is always advantageous to be abreast of time and to be in preparedness, instead of holding on to the old school of thought.

Addressing the Government Leaders Forum Asia 2008, Mr Gates predicted exciting times ahead. He spoke of computers that would soon be able to recognize talk, touch & senses so that you could talk into the computer and it would work, you write with your pen and the computer would pick it up. So that internet & I/T would be very widely used.

It is stressed here that Principal would kindly take note to bring about an awareness in the minds of young students of the importance of computerized environment, and make suitable request to the benevolent past pupils in Australia ,Canada & U.K. to assist him in this innovative field. Any advantages of new invention & advancement in Science & Technology would first pass on to the advanced countries before their benefits are brought to developing Countries. In this perspective our Past Pupils living in the West, America Canada & Australia are definitely at an advantage who would be ready to transmit this knowledge to their Alma Mater, vis-vis the students.

In this issue a notable deviation from the previous issues is noticed, in that most of the articles appear in Tamil. This is to cater to the wish of the most of the youthful members of the OBA. Besides there were no outstanding achievement by any individual to warrant publication in this issue. We are highlighting the services of a General Practitioner-Dr. M.K. Muruganantham, who is a well sought after practitioner in Colombo. His love for his native town of Pont Pedro was so

great, he left his lucrative practice in Colombo and left for PtPedro.. After a stint there he returned to Colombo as medical supplies could not be obtained there to serve the public. But what a loss to Point Pedro natives is a gain to Wellawatte & Kotahena Tamils & Muslims. Apart from his professional service, contribution to Tamil literary activities takes his time. He has graced Tamil Literary meetings conducted under the auspices of Tamil Sangam & Kampan Kalagam at Wellawatte. An article is appearing on his 60th birthday celebrations convened by the leading Tamil writers in Colombo.

Two articles are appearing on the two best students of Hartley in last years A/L/ exam in bio & Maths section.

The College day is an important event in the College and we reproduce a speech delivered by the Chief Guest Mr. P. Swarnarajah the High Court Judge of Jaffna & Vavuniya.He has stressed the importance of English although he made the speech in Tamil for the benefit of all the students.

Thumpalai Point Pedro has produced an eminent Scientist in Dr. N. Sivayogan who was awarded by the Science & industrial Ministry the "Young Scientist" –a national award-Now he is the head of the Physics Department of the Jaffna Campus. An article about him is also reproduced by courtesy "Thinakural"

---

## UNIQUE ACHIEVEMENT BY HARTLEY G.C.E (A/L) RESULTS 2007

### Maths Stream

| | |
|---|---|
| 1.V.Rajeevan | 3A |
| 2. S.Sarangan | 3A |
| 3. R.Pirasanthan | 2AB |
| 4. K.Thivaharan | 2AB |
| 5. K.Nitharasan | A2B |
| 6. S.Pirasath | A2B |

### Commerce Stream

| | |
|---|---|
| 1.I.Nirupan | 2AB |
| 2. V.Sutharsan | 2AB |
| 3. V.Kajanthan | A2B |
| 4. S.Kokulan | A2B |

### BIO Stream

| | |
|---|---|
| 1.S.Nimalan | 3A |
| 2. S.Achchan | 3A |
| 3. K.Alan Jerosan | 2AB |
| 4. S.Niroshan | 2AB |
| 5.P.Balachandran | A2B |
| 6.B.Sansayan | A2B |
| 7. S.Vijayalayan | A2B |

### Arts Stream

| | |
|---|---|
| 1.R.Niroopan | 3A |
| 2. S.Sanganathan | 3A |
| 3. R.Kousigan | 3A |
| 4. S.Thinesh | 2AC |
| 5.T.Ramanan | A2B |
| 6.K.Uthayaroopan | A2B |
| 7. S.Nishanthan | A2B |
| 8. R.Nihash | A2B |

G.C.E ( O/L) RESULTS 2007

| No of Distinction | No of Students |
|---|---|
| 10A | 5 |
| 9A | 10 |
| 8A | 5 |
| 7A | 8 |
| 6A | 4 |

| No of Students | No of Students qualified for (A/L) | % Pass |
|---|---|---|
| 120 | 120 | 100% |

# PRIZE GIVING DAY

## ஹாட்லி கல்லூரி நிகழ்வில் நீதிபதி சுவர்ணராஜா







வடமராட்சி மாணவர்கள் ஆங்கிலத்தில் புலமை வாய்ந்தவர்களாக இருக்க வேண்டும். ஆங்கில மொழிக்கு முக்கியத்துவம் கொடுத்து, அதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். அன்றைய ஆங்கில மொழிப்பாரம்பரியம் இன்றும் நிலைத்திருப்பதைப் பார்க்கும் போது எனக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது.

இவ்வாறு பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவனும் வவுனியா மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களின் மேல் நீதிமன்ற நீதிபதியுமான பி.சுவர்ணராஜா, கல்லூரித் தினம் மற்றும் தங்கப்பதக்கம் சூட்டும் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது கூறினார்.

கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவர் கே.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நீதிபதி சுவர்ணராஜா மேலும் பேசுகையில் கூறியதாவது:

ஹாட்லிக்கல்லூரி பலதரப்பட்ட செயற்பாடுகளிலும் பெருமை கண்டுள்ளது. கல்லூரி மாணவர்களிடையே ஒழுக்கத்தைக் கட்டிக்காத்த பெருமை முன்னாள் அதிபர்களுக் குண்டு. வீதியில் துவிச்சக்கர வண்டியில் இருவர் பிரயாணம் செய்யும்போது பொலிசாருக்குப் பயப்படாத மாணவர்கள் மாணவ தலைவர்களை வீதியில் கண்டால் இறங்கி ஒதுங்கிப் போவார்கள். அந்தளவுக்கு அதிபர், ஆசிரியர் குழாம் மாணவர்களுக்கு உரிமைகளை வழங்கியிருந் தார்கள்.

மாணவர்களைப் பொறுத்தவரையில் நான் என்று எண்ணாது நாங்கள் என்று எண்ணிச் செயற்பட வேண்டும். வகுப்பில் இருந்து கல்வி கற்கும்போது குழுவாகவும், விளையாட்டின்போது அணியாகவும், இயங்கி வந்தால் தான் நான் என்ற மனப்பான்மை நீங்கி நாங்கள் என்ற மனப்பான்மை வளரக் கூடியதாக இருக்கும்.

ஹாட்லிக்கல்லூரியைப் பொறுத்தவரை கல்வியில் மட்டுமல்ல விளையாட்டுத்துறை மற்றும் ஒழுக்கம், கட்டுப்பாடு ஆகிய விழுமியங்களையும் கட்டிக்காத்து வருவதும், சாதனைகளைப் புரிவதும் கல்லூரிக்கு மேலும் பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளது.

ஹாட்லிக்கல்லூரி என்றால் பூரணம் பிள்ளை, பூரணம்பிள்ளை என்றால் ஹாட்லிக் கல்லூரி என்று பிரித்துப் பார்க்க முடியாத அளவுக்கு பெருமைக்குரிய அதிபராக பூரணம் பிள்ளை விளங்கினார். அவர் கட்டிக்காத்த ஒழுக்கம், கல்வித்தரம் மாணவர்களின் புகழ் அத்தனையும் இன்று கல்லூரியில் சுடர் விட்டுப் பிரகாசிப்பதை நேரில் காணும்போது எனது உள்ளம் பூரிப்படைகிறது. ஹாட்லிக்கல்லூரியின் புகழ் பூத்த முன்னாள் அதிபர்களான ஆர்.எம். குணரத்தினம், சாம்.தம்பிமுத்து ஆகியோரையும் இச்சந்தர்ப்பத்தில் என்னால் நினைவு கூராமல் இருக்க முடியாது. இக்கல்லூரியில் நான் சேர்ந்து எனது கல்வியை மேற்கொள்வதற்கு காரணமாக இருந்த மூன்று அதிபர்களையும் என்னால் மறக்க முடியாது.

உலகநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் ஹாட்லி மைந்தர்களை அங்கு நாம் காண நேரிடின் அவர்கள் தங்கள் செயற்பாட்டின் மூலம் ஹாட்லிக்கல்லூரிக்கு புகழ் சேர்த்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

ஹாட்லிக்கல்லூரியின் அன்றைய கல்விப் பாரம்பரியத்தை இன்றும் கட்டிக்காத்துப் பேணிவரும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் உண்மையில் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

இவர்கள் மென்மேலும் உயர்ந்த நிலை அடைந்து பல்வேறு சாதனைகளைப் புரிந்து சேவையாற்ற வேண்டும். இதன் பெறுமதியை உடன் தெரியாமல் போனாலும் காலப்போக்கில் அதன் அருமை, பெருமைகளை அறிய முடியும்.

நாம் எப்போதும் இறையருளில் நாட்ட முடையவர்களாக இருக்க வேண்டும். இறையருளே எமக்கு நிலையான வாழ்க்கையைக் கொடுக்கும்.

இன்று நான் மேல்நீதிமன்ற நீதிபதி ஸ்தானத்திற்கு உயர்ந்து இருக்கின்றேன் என்றால் அது இறையருளின் தாற்பரியம்தான் என்று பெருமையுடன் கூறுவேன்.

பல தசாப்தங்களின் பின் இங்கு வந்தபோது ஒன்றை மட்டும் என்னால் உணர முடிந்தது.

அதுதான் ஹாட்லியின் அமைப்பு மாறிவிட்டாலும், அதன் கல்வித்தரம் ஒரு போதும் மாறவில்லையென்பதாகும். முன்னாள் அதிபர் பூரணம்பிள்ளை ஒழுக்கத்தை வலியுறுத்தினார். அதனை அறிவுறுத்தினார். அதனை நிலை நாட்டினார் என்று கூறி பெருமையடைகின்றேன் என்றார். நிகழ்வில் கல்லூரியின் கொழும்பு பழைய மாணவர் சங்க செயலாளர் எஸ்.கதிரைவேற் பிள்ளை, வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா உட்பட பலர் கலந்து கொண்டனர். க.பொ.த.உயர்தர பரீட்சையில் 3 ஏ சித்திபெற்ற 7 மாணவர்கள் தங்கப்பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

# Winners of Gold Medal

Their results and their district ranks are given below.

| Stream | Name | Results | Dist.Rank |
|---|---|---|---|
| Maths | 1. V.Rajeevan | 3 A | 01 |
| | 2. S.Sarangan | 3 A | 19 |
| Bio | 3. S.Nimalan | 3 A | 01 |
| | 4. S.Achchan | 3 A | 09 |
| Arts | 5. R.Niruban | 3 A | 27 |
| | 6. S.Sankanathan | 3 A | 132 |
| | 7. R.Gowsigan | 3 A | 53 |
| | 8. S.Thines | 2AC | 108 |

# Winners of Awards / Scholarship

| Award | Name of the recipient |
|---|---|
| 01. Vairamuttu Memorial Award | Best O/L student 2006 - Master Subendran Prasath |
| 02. S.C.Rasaratnam Memorial Award | Best sportsman 2006 - Master Anton Thomoson |
| 03. K.Ganeshalingam Foundation Award | 1. Tharmaratnam Uthayakumar<br>2. Anthonipillai Anton Johnson |
| 04. S.S.Somasundaram Memorial Award | Best A/L Student 2005 / 2006<br>Ratnarajah Ragulan<br>Fac.of Engineering, Uni. of Moratuwa |
| 05. Prof.Thurairajah Memorial Scholarship | Selvanathan Prasath<br>Fac. of Medicine, Uni. of Colombo. |
| 06. Pooranampillai Memorial Scholarship | Raveendranathan Pranavan<br>Faculty of Arts, University of Jaffna |
| 07. Kenkatharan Memorial Award<br>Best Cricketer 2007 | Tharmalingam Muhunthan |
| 08. Nesamani Mahesan Memorial Scholarship | Maheswaran Gobishanth<br>Fac. of Medicine, Uni. of Jaffna |
| 09. Dr.Vasanthy Karunakaran Award | Vaithilingam Inthujan and Vairavanathan Sivatharshan<br>Fac. of Medicine, Uni.of Jaffna. |

# திட்டமிட்டு இலட்சியத்துடன் கற்றால் வெற்றிபெற முடியும்.

அகில இலங்கையில் சாதனை படைத்த
ஹாட்லி மாணவன் ரஜீவன் கூறுவார்.



சிறந்த திட்டமிடல் இலட்சிய வேட்கையுடன் கல்விகற்றால் மாணவர்களினால் சாதனையை நிலைநாட்ட முடியுமென கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் அகில இலங்கை ரீதியாக தமிழ்மொழி மூலம் கூடிய இஸட் புள்ளிகளைப் (3.1353) பெற்று சாதனை படைத்துள்ள பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி மாணவன் விமலநாதன் ரஜீவன் தெரிவித்தார்.

தொலைபேசி மூலமாக நேற்று வியாழக்கிழமை எமக்கு வழங்கிய செவ்வியில் இவற்றைக் கூறிய அவர் மேலும் தெரிவித்ததாவது.

"எனது தந்தையாரின் பெயர் வை.விமலநாதன் அவர் ஆசிரியராகக் கடமையாற்றுகிறார். எனக்கு 2 ஆண் சகோதரர்களும் ஒரு தங்கையும் உண்டு.

நான் உயர்தரம் கற்க ஆரம்பிக்கும்போது இவ்வாறான சாதனையை நிறைவேற்றுவேனென எதிர்பார்க்கவில்லை. எனினும், பின்னர் சாதனையை நிலைநாட்டுவேனென்ற நம்பிக்கை ஏற்பட்டது.

சிறந்த பரீட்சை முடிவுகளை பெறுவதற்கு நான் கடுமையாக படித்தேன். இரவு 12 மணிவரை படிப்பேன். தனியார் வகுப்புக்கும் சென்றேன். சிறந்த பரீட்சை முடிவுகள் எடுக்க எனக்காக உழைத்தவர்களுக்கான வெற்றி எனவும் கருதலாம்.

சிறந்த கணினிப் பொறியியலாளராக வரவேண்டுமென்பது எனது இலட்சியம். சிறந்த பரீட்சை முடிவுகளை பெறுவதற்கு எனது பெற்றோர், பாடசாலை சமூகம் மற்றும் எனது ஊரான வியாபாரிமூலை ஆகியன முக்கிய பங்காற்றியிருந்தன.

இணையத்தளத்தில் எனது பரீட்சை முடிவுகளை பார்த்தே எனது சாதனை பற்றி அறிய முடிந்தது. இதனைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சியடைந்த நான் எனது மகிழ்வை என் பெற்றோர்களுடன் பகிர்ந்து கொண்டேன். இறைவனுக்கும் நன்றி செலுத்தினேன்.

நான் பாடசாலையில் கல்வி கற்றுக்கொண்டிருந்த சமயமே எனது பிரதேசம் என்னை பல வழிகளில் கௌரவித்தது. இது எனக்கு உற்சாகத்தை வழங்கியது. ஏனைய மாணவ சகோதரர்களும் சிறந்த திட்டமிடலுடன் முழுமனதுடன் இலட்சிய வெற்றியுடன் படித்தால் இவ்வாறான சாதனைகளை நிலைநாட்ட முடியும். ஆசிரியர்களுக்கு கீழ்ப்படிவதும் இங்கு பிரதானமானது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, ஹாட்லிக்கல்லூரியைச் சேர்ந்த ஸ்ரீசோதிநாதன் நிமலன் என்ற மாணவனும் உயிரியல் பிரிவில் யாழ்.மாவட்டத்தில் சிறந்த பரீட்சை முடிவுகளைப் பெற்றுள்ளார். பாடசாலை மாணவர்களின் இச்சாதனை குறித்து கல்லூரி அதிபர் நடராஜா தெய்வேந்திரராஜா கூறுகையில்,

"எமது கல்லூரி மாணவர்கள் வெறும் புத்தகப் பூச்சிகள் மாத்திரமல்ல அவர்கள் ஆசிரியர்களின் அன்பைப் பெற்று கீழ்ப்படிவுடன் கல்வியில் ஆர்வம் செலுத்தினார்கள். தாம் அறிந்ததை வேறு மாணவர்களுக்கு சொல்லிக் கொடுத்தார்கள்.



எமது கல்லூரி ஆசிரியர்களின் உழைப்புக்கு கிடைத்த வெற்றியாகவே அதிபரென்ற வகையில் இம் மாணவர்களின் சாதனையைக் கருதுகிறேன். தமது வீடுகளில் நடைபெற்ற மகிழ்ச்சிகரமான நிகழ்வு போன்றே மாணவர்களின் சாதனையை கல்லூரி கருதுகிறது" என்றார்.

# நல்லதொரு மருத்துவனாக சிறந்ததோர் இலக்கியவாதியாக டாக்டர் முருகானந்தன்



முற்போக்குச் சிந்தனையாளரும், கலை, இலக்கியவாதியும் பிரபல வைத்திய கலாநிதியுமான டாக்டர் எம்.கே.முருகானந்தனின் 60ஆவது அகவையையிட்டு; கொழும்பு-கலை, இலக்கிய நண்பர்கள் ஏற்பாட்டில் வெள்ளவத்தை பெண்கள் கல்வி ஆய்வுகூடத்தில்; 06.04.2008 ஆம் திகதி விழாவொன்று நடைபெற்றது.

விழாவில் தலைமையுரை ஆற்றிய எழுத்தாளர் புலோலியூர் ஆ.இரத்தினவேலோன் தெரிவித்ததாவது.

தேவையானவர்களது தொலைபேசி இலக்கங்களைப் பதியும் பொழுது நான் அவர்களது பிறந்த தினத்தையும் பதிவதுண்டு. அப்பதிவின் மூலமாகவே வைத்திய கலாநிதி எம்.கே.முருகானந்தனின் பிறந்த திகதி 27.03.1948 என்பதை அறிந்துகொண்டேன். அவர் அறுபதாவது அகவையை எட்டுவதும் தெரிய வந்தது. எனது மாமனார் பிரபல எழுத்தாளர். அமரர் தென்புலோலியூர் சதாசிவம் இருந்திருந்தால் இந்நிகழ்வுக்கு அவரே தலைமைதாங்கி இருப்பார். டாக்டருக்கு அவரோடு நெருங்கிய தொடர்புகள் இருந்தன. தலைமை வகிக்கவிருந்த பேராசிரியர் எஸ்.சிவயோகம் முக்கிய அலுவலாக லண்டன் சென்றுள்ளார். எனவே தான் நான் தலைமை வகிக்க வேண்டி ஏற்பட்டது. இம்மண்டபத்தில்தான் கூட்டம் நடைபெறும் எனச் சொன்ன பொழுது; அம்மண்டபம் கொள்ளுமா? என நண்பரொருவர் கேட்டார். அதன் தாற்பரியத்தை இப்பொழுது உணர்கிறேன். இம்மண்டபம் முழுவதும் டாக்டரின் அபிமானிகள் நிறைந்திருந்தனர்.

டாக்டர் முருகானந்தன் பருத்தித்துறை வியாபாரிமூலையில் பிறந்தார். ஆரம்பக்கல்வியை மேலைப்புலோலிப் பாடசாலையில் பெற்றார். ஹாட்லிக்கல்லூரியில் இடைநிலைக் கல்வியைப் பெற்றுக்கொண்டு கொழும்பு மருத்துவக் கல்லூரியில் எம்.பி.பி.எஸ்.பட்டத்தைப் பெற்று வைத்திய கலாநிதியானார். அரச ஆஸ்பத்திரிகளில் கடமை புரிந்து பின்னர் பருத்தித்துறை மருதடியில் தனியார் மருத்துவ நிலையத்தை அமைத்து வைத்திய சேவை புரிந்தார். 1997இல் கொழும்புக்கு இடம் பெயர்ந்தார்.

புத்தக அறிமுக விழா ஒன்றிற்கு அழைக்கச் சென்றே டாக்டரை முதன் முதலில் சந்தித்தேன். இது 25 ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்றது. அன்று கண்ட பண்புகளோடேயே இன்றும் காணப்படுகிறார். இத் தன்மைதான் அவரை யொரு சாதனையாளராக்கியது.

வைத்தியப்பாணியில் அவர் கடைப் பிடிப்பது உளவியல் அணுகுமுறை. நோயாளிகளோடு பேசும் வார்த்தையில் பாதி நோய் சுகமாகிவிடும். இத்தன்மையே அவரைக் கொழும்பிலும் அதிக செல்வாக்கைப் பெறவைத்தது. "எயிட்ஸ்" குறித்து டாக்டர் முருகானந்தன் எழுதிய நூலே அவ்விடயத்தில் வெளிவந்த முதல் நூல். மருத்துவத் துறை சார்ந்த கல்விமான்கள் இலக்கியத்தில் பிரகாசிப்பது அரிது. இவர் புரியத்தக்க வகையில் எழுதுகிறார். எனவேதான் எல்லோராலும் வாசிக்க முடிகிறது. யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகிய "முரசொலி" என்ற பத்திரிகையில் "வைத்தியகலசம்" என்ற பத்தியை எழுதினார். நலவியல் சார்ந்த தொடர் 100க்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதினார். "சாயி மார்க்கம்" எனும் சஞ்சிகையின் ஆசிரியர் அசாதாரணத் துணிவோடு "அறிவோர் கூடல்" என்ற அரங்கத்தைத் தனது இல்லத்தில் நடத்தினார். இலங்கை சாஹித்திய பரிசைப் பெற்ற இவரது "நீங்கள் நலமா" என்ற நூல் 5 பதிப்புகளைக் கொண்டது. ஹாய் நலமா? என்ற பத்தி மற்றும் "ஜீவநதி" சஞ்சிகையில் எழுதும் கட்டுரைகள் புதிய பரிமாணத்தோடு வருகின்றன. தனது நூல்களின் வெளியீட்டை மிகவும் எளிமையாகவே நடத்துவார். முதல் பிரதியைப் பெற வர்த்தகர்களை அழைக்கமாட்டார். பெற்றோர் அல்லது அவரது ஆசான்களே பெறுவார். இதுவரை பதினொரு நூல்களை வெளியிட்டிருக்கிறார். அவைகளுள் இரண்டுக்குச் சாஹித்திய மண்டலப் பரிசும் கிடைத்துள்ளது.

நடிப்பிலும்கூட ஆர்வம் காட்டியிருக்கிறார். தனது இலக்கிய முயற்சிகளை அச்சில் மட்டுமன்றி இலத்திரனியல் ஊடகங்களிலும் வெளிப்படுத்தி இருக்கிறார். இலங்கை வானொலி, சக்தி தொலைக்காட்சி என்பன நிகழ்ச்சிகளைக் கொடுத்திருக்கின்றன. டாக்டரின் படத்தை அட்டையில் பொறித்து மல்லிகை சஞ்சிகை டாக்டரைக் கௌரவித்திருக்கின்றது. செல்வி

[illegible] என்ற மாணவி தனது பட்டப்படிப்புக்கு டாக்டரின் நலவியல் நூல்களை ஆய்வுக்கு உட்படுத்தி கட்டுரை சமர்ப்பிக்கவிருக்கிறார். இது நலவியல் துறையில் முருகானந்தனுக்கு கிடைத்த வெற்றியை உறுதிப்படுத்துகிறது. டாக்டரின் மணிவிழா குறித்த மலரொன்றை வெளியிட ஆயத்தங்கள் நடக்கின்றன. அவரது நண்பர்களிடமும் அபிமானிகளிடமிருந்து கட்டுரைகள் கோரப்படுகின்றன.

### மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா

டாக்டர் முருகானந்தன் மருத்துவக் கல்லூரி மாணவனாக இருந்த காலத்திலிருந்தே எனக்கு அவரைத் தெரியும். யாழ்ப்பாணத்தில் எல்லா இலக்கியக் கூட்டங்களிலும் டாக்டரைக் காணலாம். இங்கு எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்றவர்கள் இருவர் இலக்கியவாதிகளாக இருக்கின்றனர். அமரர் டாக்டர் நந்தி மற்றவர் எம்.கே.எம். முருகானந்தன்.

டாக்டரின் அறுபதாவது அகவை விழாவை மல்லிகைப் பந்தலால் நடத்தத் திட்டமிட்டோம். ஹற்றனில் நடத்தப் போவதாகக் கூறி அந்தனி ஜீவா தடுத்தார். எழுத்தாளனுக்குப் பிரச்சினையாகில் எழுபது எண்பதுகளில் இலக்கியவாதிகள் துடிப்போம். எங்களோடு சேர்ந்து வராமல் எமது நிகழ்வுகளில் பங்கு கொள்ளாத எந்தக் கொம்பனையும் மதிக்க மாட்டோம். எமக்கு இலக்கியமும் உழைப்புமே முக்கியம். இந்த கூட்டத்துக்கு ஏன் நான் அல்லது தீர்வை பொன்னையன் தலைமை தாங்கக்கூடாது? முருகானந்தனின் எழுத்தைவிட யாழ்ப்பாணத்தில் அவரது ஏற்பாட்டில் நடைபெற்ற அறிவோர் கூடல் பிரமாதமானது.

மாலைகொண்டு வந்தேன் இங்கு பொன்னாடை வேண்டாம், பூமாலை வேண்டாம் என்கின்றனர். அப்போ எப்பொழுது இலக்கியவாதிகளை வாழ்த்தப் போகின்றீர்கள்? டாக்டரின் உழைப்புக்குப் பின்னால் அவரது மனைவி இருக்கிறார். வழிகாட்டுகிறார். அறிவுத் தளத்தை விரிவுபடுத்த உதவுகிறார்.

### உளவளதிபுணர் புனைகதைப் படைப்பாளி கோகிலா மகேந்திரன் :-

யார் சிறந்தவர்? யார் ஆளுமைமிக்கவர்? என்ற தேடல் எனக்குண்டு. எம்.கே. முருகானந்தத்தை எனக்கு இருபத்தைந்து ஆண்டுகளாகத் தெரியும். 1995ஆம் ஆண்டிலிருந்து எங்கள் குடும்ப வைத்தியர். இலக்கியக்காரர்கள் மத்தியில் வித்தியாசமானவர்கள் விடயங்களை உள்வாங்கும் பொழுது விஞ்ஞானத் தன்மையோடு உள்வாங்குவார். அவரிடம் தெளிவு இருக்கிறது. தன்னை யாரென்று? அவருக்குத் தெரியும். நிறையச் செய்து விட்டுப் புகழைத் தேடாதவர். இவர்களைச் சரியென நான் சொல்ல மாட்டேன். எதைச் சரியெனத் தான் நினைக்கிறாரோ அதையே எம்.கே.எம்.செய்வார். எவரது வலைகளிலும் விழமாட்டார். இன்னொருவரைப் போல் தான் இருக்க வேண்டுமென விரும்பாதவர். அழகு சந்தோஷ் என்பதும் அவரது புனைபெயர். உடல்நலம், சமூகநலம், ஆன்மீகம் என்ற சமன்பாடுகளோடு வாழ்கிறார். அவருக்கு கோபம் வந்தது எனக்கு நினைவில்லை பார்வையில் நேர்மை உண்டு. அவரது முதுமை ஆரோக்கியமாகவே இருக்கும். அவரது தொழிலின் மூலப்பொருள் தொடர்பாடல். அடுத்தவரைப் புரிந்திருக்கத் தெரிந்திருக்க வேண்டும். எம்.கே.எம் ஐப்பற்றி எவருமே குறை சொன்னதை நான் கேட்டதில்லை. நிபுணர்களால் கைவிடப்பட்டவர்கள் எம்.கே. எம்மிடம் சுகம் பெற்றிருக்கின்றனர். ஒன்றும் தெரியாதவர்களே நிறையக் கதைப்பார்கள். அமைதியானவர்கள்.

### பிரபல எழுத்தாளர், ஆய்வாளர் தெளிவத்தை ஜோசப் :-

நான் டாக்டர் முருகானந்தத்திடம் ஒருபோதும் மருந்துக்குச் சென்றதில்லை. நான் சிறிது சுகவீனமுற்று இருந்தபொழுது அடிக்கடி என்னை வந்து பார்த்தார். எழுத்தாளனைப் பார்க்க வரும் பண்போடு வந்தார். எம்.கே.எம்.மின் புத்தகங்கள் மருத்துவத்தை இலகுபடுத்துபவை. அவரது புத்தகங்களிலொன்று டாக்டரின் டயறிக் குறிப்பிலிருந்து என்ற அநுபவக் குறிப்புகள் அநுபவத்தை அநுபவமாகவே குறிப்பிடும் பொழுது ஒரு எழுத்தாளன், கலைஞன் எப்படி உருவாகிறான் என்பது புரிகிறது. சிறந்த படைப்பாளிக்குரிய நடை அவரது ஆளுமையைக் கணிக்கவைக்கிறது இந்நூல். மனிதரை, இலக்கியவாதியை, எழுத்தாளரைக் கௌரவித்து மதிக்கத் தெரிந்தவர். மல்லிகையின் 25 ஆவது ஆண்டு விழாவுக்குத் தலைமைவகிக்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிட்டியது. யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. எழுத்தாளர் சம்பந்தனைச் சந்தித்தேன். டாக்டர் முருகானந்தன் என்னைத் தன் வீட்டிற்குக் கூட்டிச் சென்றார். நலவியல் புத்தகங்களில் டயறிக் குறிப்புகள் டாக்டரைக் கலைஞனாக இலக்கியவாதியாக அத்தாட்சிப் படுத்துகிறது. எம்.கே.எம் வாசகரைச் சிந்திக்கவைத்தவர்.

### முற்போக்கு எழுத்தாளர் தீர்வை பொன்னையன்

1997 ஆம் ஆண்டிலிருந்து முருகானந்தன் அறிமுகம் அமைதி, நிதானம், எளிமை, அவரது போக்குகள் மக்கள் நலன் சார்ந்த சிந்தனையாளன் வைத்தியத் துறையில் நோய் வராமல் தடுப்பது எப்படி? என்ற விடயத்தில் நூல்களை எழுதி இருக்கிறார். இத்தகைய நூல்களை எழுதிய இன்னொருவர் அமரர் பேராசிரியர் நந்தி. சாதாரண மக்கள் புரிந்து கொள்ளும் படியும், புரிந்ததை நடைமுறைப்படுத்தும்படியும் முருகானந்தன்

வைத்திய நூல்களை எழுதியிருக்கிறார். தனது புலமையைக் காட்ட வேண்டும் என்ற எண்ணத்தோடு எழுதவில்லை. அவரது எழுத்துகள் இலக்கிய ரசனையைத் தருபவை. கர்வம் இல்லாதவர். நோயாளிகளைப் பொறுத்த மட்டில் இவர் அதிமுக்கியமந்தர், முக்கியமந்த இல்லை. தன்னிடம் வைத்தியத்துக்கு வரும் எவரையும் ஒரு மாதிரியாகவே கணிப்பெடுத்து தனது பணியைச் செய்வார். சிறந்த முறையில் நோயாளிகளோடு உரையாடி நோயின் தன்மையை விளக்கப்படுத்துவார். மனிதாபிமான முடைய டாக்டர் குறைந்த விலையான மருந்துகளையே எழுதுவார். நல்லதொரு வாசகர். இலக்கியத் தோடு நிற்காமல் சினிமாவிலும் அக்கறை கொண்டுள்ளார்.

2006 ஆம் ஆண்டில் விபவிகலாசார மையத்தில் இணைந்தார். சூத்திரநர் அமரர் வ.இராஜையாவோடு இணைந்து விபவியின் இலக்கியச் செயல்பாடுகளில் சிறப்புற உழைத்துள்ளார். இலக்கியப் பட்டறைகள், கருத்தரங்குகள் என்பவற்றில் பணி செய்தார். சிறுகதை மதிப்பீடுகளைச் செய்தார். இரண்டரை வருடங்களாக சிறுகதை மேம்பாட்டிற்காக வழிகாட்டினார். முற்போக்குக்கலை இலக்கியப் பேரவையின் வெளியீட்டு முயற்சிகளுக்குத் தனது ஆலோசனைகளைத் தந்தார். தொகுதிக்கென இருபத்தைந்து சிறுகதைகளைத் தொகுத்துத் தந்தவர். இவைகளின் மூலமாகத் தனது முழுமையான பங்களிப்பினை விபவிக்குத் தந்தார். எதுவிதமான சலுகைகளையோ கொடுப்பனவுகளையோ எதிர்பார்க்காமல் முழுமனதோடு இவைகளை முருகானந்தன் செய்து தந்திருக்கிறார். அவர் கலை, இலக்கிய, வைத்தியத்துறைக்கு ஆற்றிவரும் பங்கு காலாதிகாலமாகப் பேசக் கூடியது.

ஞானம் சஞ்சிகையின் சார்பில் பொன்னாடை போர்த்தி, அன்பளிப்பு வழங்கினார் ஞானம் ஆசிரியர், பிரபல நாவலாசிரியர் தி.ஞானசேகரன்.

60 செக்கன்கள் ஒரு நிமிடம் 60 நிமிடங்கள் ஒரு மணித்தியாலம் என்ற உண்மை அதிமுக்கியமானது. 60 பூர்த்தி என்பது சஷ்டியப்த பூர்த்தி 50 ஆவது வயதுக்கு முன்னர் மற்றவர்களது ஆசியைப் பெறவேண்டும். 60க்குப் பின்னர் மற்றவர்களுக்கு ஆசிவழங்கும் தகைமை வந்து சேரும். நான்கு ஆண்டுகளுக்கு முன் என் உடலை முழுதாக அப்பலோ ஆஸ்பத்திரியில் பரிசோதித்தேன். பிரசர் இருப்பதாகச் சொல்லி மருந்து எழுதித் தந்தனர். நான் ஐமிச்சத்தோடு முருகானந்தத்திடம் வந்து காட்டினேன். அவர் நோயாளியின் விபரங்களைக் கணினியில் பதிந்து வைத்திருப்பவர். கணினியைப் பார்த்து எழுதிய மருந்துகளைப் பாவிக்கவேண்டாமெனத் தடுத்தார். வைத்தியம் சம்பந்தமான சந்தேகங்களை எம்.கே.எம்மிடம் தொலைபேசியில் கூறி விளக்கம் பெறுவதுண்டு. மருத்துவர்களுக்குப் பக்க பலமானவர். சிறந்த பண்பாளர். முதல் முதலாக எயிட்ஸ் நோயாளிகளைத் தொட்டும் பேசலாம், அவர்களை மனிதர்களாகவும் ஏற்றுக்கொள்ளலாம் எனத் தனது நூலின் மூலமாக அறிவுறுத்தினார் முருகானந்தமே. இதுவே முழுத்தமிழ் உலகிலும் முதலாவதாக வெளிவந்த எயிட்ஸ் சம்பந்தமான நூல். அவர் வெளியிட்ட அத்தனை நூல்களும் மாணவர்களுக்குப் பிரயோசனமானது. ஞானத்தில் நூலொன்றை இன்று வெளியிடவிருந்தோம். மணிவிழா என்பது ஒருவருக்கு வாழ்வில் ஒருமுறை தான் வரும். அக்காரணத்துக்காக அந்த விழாவைப் பிற்போட்டுள்ளோம்.

பத்திரிகையில் வந்தால் பத்திரிகையோடு போய்விடும் எனச் சொல்லி சிறுகதைத் தொகுப்பு வெளியிட என்னை ஊக்குவித்தவர் டாக்டர் முருகானந்தன் என எழுத்தாளர் கைலாயர் பேசி மணிவிழா நாயகனை வாழ்த்தினார். "பாடசாலையில் நான் டாக்டரின் சமகாலத்தவன். நான் சிரேஷ்ட மாணவன். எங்களைப் போலல்லாது டாக்டர் அச்சாப்பிள்ளையாகப் பாடசாலையில் காணப்பட்டார்" எனப் பேசி மகுடமாய் வாழ்த்தினார். எழுத்தாளர் மருத்துவர் பாலசுப்பிரமணியமும் பேசினார். கலை, இலக்கிய விமர்சகர் கே.எஸ்.சிவகுமாரன் புத்தகங்கள் அன்பளிப்புச் செய்து கௌரவித்தார்.

## மணிவிழா நாயகன் எம்.கே.முருகானந்தன் ஏற்புரை :-

இவ்வளவு புகழுரைகளையும் கேட்டபின் என் எடை குறைந்து விடுமோ! எனது மனநிலை மாறுமோவென எனக்குப் பயமாக இருக்கின்றது. இலக்கிய நாட்டம் எனக்கு சிறு வயதிலேயே வந்து விட்டது. வைத்தியத்துறைக்கான சிந்தனையும் அப்பவே கருக்கட்டி விட்டது. விளையாட்டுத் தன்மை எனக்கு இருக்கவில்லை. வாசிப்பில் தணியாத ஊக்கம் இருந்தது. டாக்டர் தொழிலுக்கு வரவேண்டுமென்ற உறுதி இருந்தது. தொழிலை நான் சந்தோசமாகவே செய்கிறேன். நோயாளிகளை விளங்கு பேசுவதை தவிர்த்துக் கொள்வேன். எனது எழுத்துப் பணிக்கு உதவினோர்கள் ஊக்கம் தந்தனர். ஏ.எல் வகுப்புக்கு வரு முன்னரே மல்லிகை சஞ்சிகையை வாசிக்கத் தொடங்கி விட்டேன். நான் எழுதுவதற்கு அமரர் நந்தியே காரணமாக இருந்தார். அவரது எழுத்துக்கள் எனக்கு ஆர்வத்தைத் தந்தன. செகராசா, சசிதிருதணை பூரணத்தி ஆகியோர் எனது மீடியா எழுத்துக்கு ஊக்கிகளாக இருந்தனர். ஐந்து சிறுகதைகளை மட்டுமே எழுதிய எனக்கு இப்படியொரு கௌரவம். எனது தொழிலைக் கவனிக்காது நான் ஒரு போதும் பொது நிகழ்வுகளில் கலந்து கொள்வதில்லை; விடுமுறை நாளையே அதற்காக ஒதுக்கிவைத்திருக்கிறேன். ஒரேஒரு முறை திருக்குறளைப் பற்றி பேசுவதற்காக கம்பவாரிதி இ.ஜெயராஜ் அழைத்தார். அவரது அழைப்பை ஏற்றேன். தனது மணிவிழா சம்பந்தமான கட்டுரைகளை எழுதியவர்களுக்கும்; பிரசுரித்த பத்திரிகைகளுக்கும் விழாவுக்கும் வந்தோருக்கும் டாக்டர் நன்றி கூறினார்.

# கலாநிதி நாகலிங்கம் சிவயோகனுக்கு தேசிய விருது

பருத்தித்துறை நகரத்திலுள்ள தும்பளைக் கிராமத்தின் மைந்தனான கலாநிதி நாகலிங்கம் சிவயோகனிற்கு விஞ்ஞானத் தொழில்நுட்ப அமைச்சின் தேசிய விஞ்ஞானத் தொழில்நுட்ப ஆணைக்குழு 2006 ஆம் ஆண்டிற்கான விஞ்ஞானத்தை மக்கள் மயப்படுத்தியமைக்கான அதியுயர் விருதான இளம் விஞ்ஞானி என்ற தேசிய விருதை வழங்கிக் கௌரவித்தது. தமிழ் மண்ணிற்குக் கிடைத்த மகிழ்ச்சியான விடயம் மட்டுமன்றி பெருமைதரும் விடயமுமாகும். இது இளைஞர்கள் கடுமையான உழைப்பின் மூலம் எதனையும் சாதிக்கலாம் என்பதற்குச் சான்றாகவும் உள்ளது.

இந்த அதியுயர் தேசிய விருது கொழும்பிலுள்ள கைத்தொழில் தொழில்நுட்ப நிலையத்தில் நடைபெற்ற விழாவில் 18.12.2007 அன்று தேசிய விஞ்ஞானத் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் பணிப்பாளரும், பிரதான நிறைவேற்று அதிகாரியுமான கலாநிதி ஆர்.டி.குணரட்ண அவர்களால் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட வாழ்நாள் பேராசிரியை நளினி, பி.ரட்ணசிறியால் கலாநிதி நாகலிங்கம் சிவயோகனிற்கு வழங்கப்பட்டது. விஞ்ஞானத்தை மக்கள் மயப்படுத்தும் இவரது பன்முகப்பட்ட முயற்சிகளிற்காக இவ்விருது அளிக்கப்பட்டுள்ளது. பாடசாலை மட்டங்களில் விஞ்ஞானப் புதிர் வினாவிடைப் போட்டிகள், விஞ்ஞானப் பேச்சுப் போட்டிகள், விஞ்ஞானக் கண்காட்சிப் போட்டிகள், விஞ்ஞானக் கட்டுரைப் போட்டிகள் போன்றவற்றை நடத்தி விஞ்ஞான அறிவையும் புதிய விஞ்ஞானக் கண்டு பிடிப்புக்களையும் மக்கள் மத்தியில் வளர்ப்பதற்கு இவர் செய்துவரும் சேவைக்காக இவ்விருது கிடைத்துள்ளது. இவரின் சேவைகளில் முக்கியமானதாக மாணவர் ஆய்வாளர் விருது போட்டிகளை நடாத்தி விஞ்ஞான ஆய்வுக் கலாசாரத்தை எமது சமூகத்தில் உருவாக்க இடைவிடாது தொடரும் பணிக்காக மேற்படி விருது கொடுக்கப்பட்டமை குறிப்பிடக் கூடியதொன்றாகும். மேற்படி போட்டிகளை நடாத்தும் போது அவை பற்றிய கட்டுரைகளை பத்திரிகைகளில் எழுதி பங்குபற்றும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கப் பாடுபட்டதுடன் சிறந்தவற்றை எவ்வாறு தெரிவுசெய்ய வேண்டும் என்பதற்கான விடயங்களை ஆழமான கருத்தக்களுடன் ஆராய்ந்து "சொட்டுப் புள்ளியிடும் பொறிமுறை" (Quantum Marking Technque) ஒன்றையும் அறிமுகப்படுத்தியுள்ளார். இது பல வருடங்களாக இன்றும் பாவனையிலுள்ளது. இவர் மேற்கூறப்பட்ட தனது விஞ்ஞான மேம்பாட்டுப் பணி நடவடிக்கைகளை யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தினூடாக நடத்தி வருகிறார். யாழ்ப்பாண குடாநாட்டில் மட்டுமன்றி போர் நிறுத்தக் காலத்தில் (2002 - 2006) மேற்படி போட்டிகள் வன்னி மற்றும் மன்னார் மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்க அரும்பாடுபட்டார்.

இவர் இதுவரை 35 இற்கும் மேற்பட்ட விஞ்ஞானக் கட்டுரைகளை எளிமையான, ஜனரஞ்சமான முறையில் தினசரிப் பத்திரிகைகளிலும் பாடசாலை விஞ்ஞானச் சஞ்சிகைகளிலும் எழுதியுள்ளார். பொதுமக்களிற்கு மிகவும் பயன்படும் விதத்தில் எழுதிய வாகன ஒட்டுநர் அனுமதிப் பத்திரங்களின் அவசியம், மின்சாரக் கட்டணங்களைக் கணித்தல் , தொலைபேசிக் கட்டணங்களைச் சிக்கனமாக்குதல் போன்ற கட்டுரைகள் பலராலும் தேடி வாசிக்கப்பட்டமையைக் காணக்கூடியதாக இருந்தது. உலக பௌதிகவியல் ஆண்டான 2005 இனைக் கொண்டாடும் விதமாக 20 ஆம் நூற்றாண்டின் இணையற்ற விஞ்ஞானியான அல்பேர்ட் ஐன்ஸ்ரைன் பற்றி யாழ்ப்பாண தினசரிப் பத்திரிகையொன்றில் சிறப்புக்கட்டுரையொன்றை தொடராக பல வாரங்கள் எழுதியுள்ளார்.

பௌதிகவியலில் நடத்தப்படும் சர்வதேச போட்டியான ஒலிம்பியாட் போட்டிக்கு 2006 ஆம் ஆண்டு முதல் வடபிராந்திய இணைப்பாளராக இலங்கைப் பௌதிகவியல் சங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ளார். இப்போட்டியை நடத்துவதற்குக் கிடைத்த சந்தர்ப்பத்தில் அது சம்பந்தமான கட்டுரைகளை பத்திரிகைகளில் எழுதியும் பாடசாலைகளிற்கு நேரடியாக சென்று ஊக்குவித்தும் பங்குபற்றும் மாணவர்களது எண்ணிக்கையை விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிலிருந்து பலநூற்றுக் கணக்காக அதிகரிக்கக் கடுமையான , தன்னலமற்ற இவரது உழைப்புப்பின்னணியாக இருந்தது. இதன் மூலம் மாணவர்கள் மத்தியில் பௌதிகவியலை பிரபலமடையவும் வைத்துள்ளார்.

26.12.2004 அன்று காலை பருத்தித்துறை தும்பளையின் வடக்குக் கிழக்கு கரையோரப் பகுதி மக்கள் சுனாமி அனர்த்தத்தால் அல்லோல கல்லோலப் பட்டு பரிதவித்து ஓடினர். அப்போது நெல்லியடியிலுள்ள தனது புகுந்த வீட்டில் நின்று இவர் தொலைபேசி மூலம் அனர்த்தம் பற்றி அறிந்து கொண்டவுடன் தனது ஒளிப்பதிவுக் கருவியுடன் பொதுமக்கள் தடுக்கத் தடுக்க கரையோரப் பகுதிகளிற்கு விரைந்து சுனாமியின் அனர்த்தங்களை இக்கட்டானதும் ஆபத்தானதுமான கணங்களில் நின்றுகொண்டு பதிவு செய்தார். மூன்றாவது கடற்கோள் அலையின் எழுச்சியையும்

சிறந்தையும் தத்ரூபமாக துணிவுடன் பதிவுசெய்துள்ளார். இது சிறந்ததொரு ஆவணப்பதிவாக இன்று காணப்படுகின்றது. சுனாமி பற்றிய தனது அனுபவங்களை பத்திரிகைகளில் தொடர்ச்சியாக எழுதிப் பதிவு செய்ததுடன், எதிர்காலங்களில் செய்யவேண்டிய பாதுகாப்பு சம்பந்தமான ஆலோசனைகளையும் வழங்கினார். அத்துடன் சர்வதேச ஒலிப்பரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு தொலைபேசி மூலம் செவ்வி வழங்கி பாதிக்கப்பட்டவர்களிற்கு உடனடியாக உதவவேண்டுமென உலக நாடுகளிடம் கோரிக்கையும் விட்டார்.

க.பொ.த.உயர்தரப் பரீட்சைகளில் பௌதிகவியல் பாடத்திற்கு பிரதம பரீட்சகராக கடந்த நான்கு வருடங்களாக சென்றுவரும் இவர், புள்ளியிடல் கடமைக்கு செல்லுமுன்னரே பல மாணவர்கள் விடையளித்த முறைபற்றி ஆசிரியர்கள் மூலம் அறிந்து அவற்றைத் தனது சக பிரதம பரீட்சகர்களுடன் அலசி ஆராய்ந்து சென்று வாதிட்டு தமிழ் மாணவர்கள் பாதிக்கப்படாதவாறு பல நடவடிக்கைகளை எடுத்தவர். அத்துடன், மாணவர்கள் உயர் புள்ளி எடுக்க வேண்டுமென்ற நோக்கில் மாணவர் களிற்கும் ஆசிரியர்களுக்கும் பல கருத்தரங்குகளை வருடாந்தம் நடத்தியும் வருகிறார்.

கல்வி தவிர்ந்த இவரது ஏனைய நடவடிக்கைகளும் பாராட்டுதற்குரியது. 1980 - 1985 ஆண்டுகளில் தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகத்தின் தலைவராக இருந்து இளைஞர்களை விளையாட்டுத்துறையில் ஊக்கப்படுத்தியதோடு, பல சமூகப் பணிகளையும் முன்னெடுத்தார். குறிப்பாக தும்பளை வீதி கவனிப்பாரற்று பழுதடைந்து இருந்தவேளை இளைஞர்களை ஒன்று திரட்டி வீதியை செப்பம் செய்ததோடு அண்மைக் காலத்திலும் மீண்டும் பழுதடைந்த வேளை அது பற்றிப் பத்திரிகைகளில் சுட்டிக்காட்டி நடவடிக்கை எடுக்கவைத்தார். மேலும் திருடர்கள் தொல்லை அதிகரித்தபோது விழிப்புக் குழுக்களை அமைத்து இராணுவக் கெடுபிடிகளுக்கு மத்தியிலும் ஊரை இரவிரவாகக் காவல் காத்ததை மக்கள் இன்றும் நினைவு கூருகிறார்கள். அத்துடன், அண்மைக் காலங்களிலும் (2005) "பல்கலைக்கழக ஆசிரியர் கிராமியச் சங்கம்" ஒன்றை நிறுவி ஆர்வமாக இருந்தவர்களை ஒன்று சேர்த்து "ஆசிரியர் கிராமியச் சங்கம்" ஒன்றை நிறுவி ஆர்வமாக இருந்தவர்களை ஒன்று சேர்த்து அவர்களிடம் பணம் திரட்டி பெரியளவில் நிலமொன்றை கோப்பாய் பிரதேசத்தில் வாங்கி , துல்லியமாக திட்டமிட்டு அதில் சகல வசதிகளுக்கும் இடமளித்து 20 விரிவுரையாளர்களுக்கு பகிர்ந்தளித்துள்ளார். இவை அனைத்தும் அவரின் சமூகம் மீதுள்ள பற்றைக் காட்டுவதுடன், அவரின் ஆளுமையையும் உறுதி செய்யும் சான்றுகளாக இன்றும் அனைவராலும் பாராட்டப்படுகிறது. மேலும் 2002ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலுள்ள குறைநிறைகளை ஆராய்ந்து அதுபற்றிய விவரண படமொன்றைத் தனது நண்பரொருவருடன் சேர்ந்து தயாரித்து கனடா, ஐக்கிய இராச்சியம் போன்ற நாடுகளில் ஒலிபரப்புச் செய்வித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அப்போதைய நிலைமையை உலகறியச் செய்தார்.

மேற்படி இளம் விஞ்ஞானி விருதிற்கான வயதெல்லை 45 ஆகும். கலாநிதி நா.சிவயோகன் அவர்கள் தனது 44 வயதில் அப்பரிசினை தழுவவிடாமல் பெற்றுக் கொண்டதும் அவரின் ஆளுமையின் ஒரு கூறாகும்.

கலாநிதி நா.சிவயோகன் அவர்கள் தனது ஆரம்ப, இடைநிலைக் கல்விகளை முறையே தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாசாலை, ஹாட்லிக்கல்லூரி ஆகியவற்றிலும் தனது உயர்பட்டப் படிப்புக்களையும் கலாநிதி பட்டத்தையும் இந்தியாவின் ஜெய்ப்பூரிலுள்ள இராஜஸ்தான் பல்கலைக்கழகத்திலும் பெற்றுக் கொண்டவர். பல்வேறு தேச மாணவர்களுடன் ஒன்றாகப் படித்தும் பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டும் தனது சமூக நோக்கிலான செயற்பாட்டு ஆளுமையை வளர்த்துக் கொண்டுள்ளதை இவரில் அவதானிக்க முடிகிறது.

கலாநிதி நா.சிவயோகன் அவர்களின் உடலுறுதி, மனவுறுதி, பதட்டப்படாத நிதானமாக போக்கு, எந்தவிடயத்தையும் ஆழமாக நோக்கும் பண்பு என்பவற்றுடன் சமூகம் மீதான இவரின் அக்கறையும் விதந்து கூறப்பட வேண்டிய தொன்றாகும். வெறும் ஏட்டுப் படிப்புடன் நின்றுவிடாது எதனையும் நடைமுறைப்படுத்திப் பார்க்கும் பண்புகொண்டவர் இவர்.

1998ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பௌதிகவியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளராக பதவியேற்று 2006 ஆம் ஆண்டிலிருப்பது பௌதிகவியல் துறையின் தலைவராக இருந்து வழிநடத்தி வருகிறார். அவரது ஒரு சகாப்தகால சேவைக்காலத்திலுள்ளேயே மேற்படி விருதைப் பெற்றதும் அவரின் திறமைக்கு ஒரு சான்றாகும். இவர் எதிர்காலத்தில் எமது சமூகத்திற்குத் தேவையான பல செயற்பாடுகளை நிறைவேற்றி பெருமனிதனாக உயர்ந்து நிற்கப்போகும் தீவிரமான சேவை மனப் பான்மையுள்ள மனிதராவார். அவரின் உயர்வுகள் வரலாற்றின் நியதி. இது உண்மை, வெறும் புகழ்ச்சியல்ல.

# Publication of a book on New Companies Act-Mr. Rajakrishmar Ragunathan.



It is the tradition of the College that in some nook & corner of the Island, one Harlyite might perform something extra-ordinary. Mr. Ragunathan has just accomplished a feat from Kandy. Mr Ragunathan hails from "Viyaparimoolai"in Point Pedro and had his entire Secondary education at Hartley College. He entered the University of Jaffna and graduated as Bachelor of Business Administration, and joined the Teaching staff of Trinity College Kandy.

At the present juncture Business Administration is of great importance, to such an extent that students in large numbers are flocking to Institutes to master this subject. The Information Technology & Business Studies are two branches of studies which are of paramount importance to the present day highly commercialized countries. In this background the great effort of Mr Ragunathan in authoring a book on 'New Companies Act " is praiseworthy. In English there are numerous books on any subject, but in Vernacular Languages there is a limitation in the books in Science & Techno;ogy & Law. The salient feature in this effort is that the book has been published in the form of questions & answers, which makes it easy to read and understand. In particular for the students population from the examination point of view this book is a blessing in disguise.

The manner he has outlined the changes in Company Law from the elementary to the more complexities stamps his clarity of thought on the subject. Attending to the core of the daily routine of teaching correcting examination answer scripts & the term tests, he was yet able to devote time to author this book with authority. The College Authorities had spotted the latent talent in this soft spoken Teacher, that they have made him the Faculty Head of Business Studies. His insatiable appetite to learn more & to impart more is amply demonstrated by his publications which now total to ten books. In the present day complexities of life and meaningless mad rat race for anything & everything, the Author's selfless service must be acclaimed by the educated public. The present day generation owe a debt to him for making the subject easy to assimilate.

He belongs to the noble profession who are responsible for guiding the children to be useful future citizens and who are revered by so many for their dedicated service. Now he is a proud father to see his daughter acquiring 174 marks in the Scholarship examination, and being awarded the "President's Award" on March 15th 2008.

We salute this unassuming sober natured talented Commerce Teacher many more years of useful service to the students & to continue publishing books which is a lacking trait in Vernacular now.

# Congratulations

Mr Gnanathasan who was hitherto Deputy Solicitor General has now been promoted as the Additional Solicitor General . We extend to him our heartiest congratulations on his promotion and wish that he would one day be Solicitor General . In the long list of Legal Luminaries produced by Hartley , such as late Mr.Mahendran , Justice Anandacoomaraswamy , Mr Gnanathasan is yet another Legal personality coming in to limelight

An unassuming , Gentle and sober personality , He has done proud to his Alma Mater and home town Chavakacheri.

# An Act of Gesture

Mr Ragunathan announced at the last executive committee meeting , that he is gifting a digital camera to the O.B.A Hartley College Colombo Branch. This camera has come in , handy , as on many occasion we are dependent on photographers , whom we may dispense with .

Mr Ragunathan is a veteran member , who has been of immense help both financially , and in the capacity of giving valuable counsel on various matters , pertaining to the O.B.A.
We express our profound thanks for this gift.

# The Annual General Meeting July 2008

The Annual General Meeting of Hartley College OBA Colombo Branch will be held on 20th July 2008 WESTEERN HOTEL, Colombo 4 at 9.30 a.m. Tickets will be available with the under noted members of the OBA. Please note that no Tickets will be sold at the venue of the meeting. All the Hartleyits are cordially invited.

President Secretary Treasurer and
Mr. S.Balachandran
Mr.N.Vishnukanthan
Mr.R.Sunthara
Mr.V.Mahathevan
Mr.M.Thiruneelakandan.

# Message of Condolence - Sent to London

## O/A P.P.A, Colombo Branch

## By Mr. Rajanayagam

**To: Mrs.Raveendralingam and children**

MESSAGE FROM DISTANT FAR - COLOMBO, SRI LANKA.

It is with profound grief and shock that we heard of the demise of Ravi. He was a student of mine at Hartley where he exelled in games, particularly in soccer. He remained extremely proud of his school and worked tirelessly in the past pupils' Association. Lond on Branch in various capacities. He was the architect in getting the past pupils' Associations around the globe to form a "Trust" with its office in Colombo, Sri Lanka, to execute the needs of Hartley his alma mater.

It is a common saying that the "good die young" and this was yet another example. Ravi, a bold decision maker always stood by conviction. He was never afraid to call a spade a spade and then face the coneequences. His witty remarks and interesting jokes will always be remembered.

As a devoled husband, and a dutiful father, his loss is irrepareble. No words can console his wife and children, but time is a master healer. The past pupils' Association- Colombo Branch joins you all in this hour of great distress. May God the all mighty grant you peace slowly and steadily.

May Ravi attain the supreme and eternal blies - Moksha.

## Note by the Editor.

It is rather unfortunate that no account is appearing about the Prize giving function at Hartley College, as the Secretary who deputized the PPA Colombo Branch at the event, did not bring any information pertaining to this event. Our attempts to contact the Principal also was fruitless as he was pre- occupied with the building project of the new Auditorium. Only the speech delivered by the Chief guest is published.

# Matale Science College

# INFORMAL GET TOGETHER

There was an informal get together of the PPA Hartley College Colombo Branch & of the PPA Matale Science College Colombo Branch at the Colts Sports Club on 15th June 2008, by about 7.30 P.M., which is a culmination of months of negotiations between the presidents of both the Associations. The architect of this friendly relationship between the College at the Northern most tip of Sri Lanka and the College situated at the salubrious climate of the Central Hills was no other than the late Mr. Ratnasabapathy, venerated by many a student of both colleges.

Delivering his vote of thanks, Mr. Daya Kulatunge, the President of the Matale Science PPA Colombo branch, recalled the enormous hardship the organizers under went in making the event a great success. The initial plan was to have friendly cricket encounter which did not get off the grounds for the obvious reason there are no immediate school leavers fresh from playing for the college eleven, and even the youths are in their late twenties or in their mid thirties ruling out any agility for such sports. More over they are more academics than sportsmen most of them being well versed in Information Technology field gripping the modern society.

The extent to which the PP Matale Science College hold their late scholarly Principal in high esteem is amply demonstrated by their keenness to have this informal get together a reality. Continuing his vote of thanks, he said that now there is no going back from where they stared under the stewardship of late Mr. Ratnasabapathy in their educational pursuit, and for the current academic year Matale Science College, admitted no less that 94 students to the University, and ranked 5th in District wise. A stupendous performance indeed!. The magic lies in that students need to be given the taste of studies, and the rest the students will perform due to their photographic memory. He specially thanked all those who spared no pains to attend the function, amidst their core activities and in the night time when the atmosphere is not so conducive to travel about . He made a special mention of the perfect amity and the ease with which they inter-acted although it was the first time most people of each race met each other. He quipped this should be an eye-opener for the rest of the citizenry. Most of all he was particular in playing glowing tribute to Mr. Mahyvanan for his generosity in footing the bull alone which would have come to a handsome amount, judging by the skyrocketing of cost of living. Besides Mathy was instrumental in getting Colts Cricket Club for the function by virtue of his capacity as the President for quite a number of years. Last but not the least Mr Kulatunge made a fervent appeal to all those present to make this to event an annual feature, and the audience reciprocated by a round of applause.

The President of the PPA London Branch Mr. R. Uyhayasuriyan too graced the occasion who would no doubt carry the fond memories to London to share with other members there.

The function came to an end like any other good things, by a reciprocal thanks giving by Mr. Rajanayagam. He specifically thanked the fairer & smarter sex for their presence in large numbers who add colour to any ceremonies. A Memorable night that will remain in the minds for a long to come, thanks to the organizers who made it a reality.

# College Activities

## National Inter school Music Contest.

The Hartley College Junior Team, won the First Place, in the Island wide Tamil competition. As a mark of appreciation the Ex- Co decided to entertain the team, together with the accompanying teachers, and parents at a dinner, at Hotel Westeern, Frankfurt Place, Colombo-04. Mr. T. Partheepan, the Music Teacher, thanked the PPA, for the dinner arranged at short notice and the morale support given the students. He also proposed a vote of thanks.

## CIMA Spell Master.

The Spell Master competition was launched for the first time in Sri Lanka, to support a National program of promoting the development of English Language in Schools and help students to improve their English skills. This was held for 240 schools at Regional level in which 1200 students participated.

For the semi-finals only three students from the Northern Province participated and they were two boys from Hartley College & one girl from Uduppiddy American Mission College. The same three qualified to come to the finals.

At the final for the fouth & fifth place there was a keen tussle between Mast B. Kapilan of Hartley & Miss S. M. Gaayathry of Uduppiddy American Mission College and miss Gayathry managed to scrape through. Mast kapilan was pushed to the fifth place but he earned the standing ovation of the spectators, for the manner he fought, clad in his school uniform, when all the others were colorfully attired, and was the diminutive figure of all the finalists.

Mr. Rajanayagam who was witness to this enthralling competition was stunned by the Master Kapilan's performance that he decided then & there ( and to get subsequently covering approval of the ex-Co ) to award a cash present together with the other finalist Master S. Aravinth Rs. 2,000/= each and sent the gift to the Principal to be awarded in a fitting manner at the General Assembly. This is a praiseworthy performance by the young lad , who had the indomitable courage to face an enlightened public coming from the backwoods of Point Pedro, and risen to high pedestal, whilst lacking avenues to be skillful in English unlike his counterparts at Colombo.

## HONORARIUM PAID TO MR. RATNAM, ENGLISH TEACHER— BY MR. M. RAVEENDRAKUMAR.

Mr. Ratnam a retired teacher has been recruited on a contractual basis to teach English to students at Hartley, for which a honorarium of Rs. 3,000/= is paid monthly. However there is no payment involved for all the three term holidays. Mr. Raveendrekumar has offered to meet this payment from June 2007 until end of 2008. His kind act of generosity has helped to reduce the strain on the finance of the Association, which otherwise the Association would have had to foot the bill.

The importance of English Language has been the subject of discussion at many a forum. A skillful study of this Language is considered a stepping stone to have an understanding of modern Science, Technology and Medicine, besides giving a Global passport. The PPA Colombo Branch always advocated that English be taught at Hartley by competent teachers, hence this honorarium.

## MEMBERSHIP DIRECTORY.

Compilation of the Directory was one of the most pressing matters for the Association and was getting protracted for along time due to varied reasons. Finally it has been resolved to the satisfaction of a great majority. This is due to a novel idea put forward by Mr. Thayaparan in keeping with the modern trend of the Information Technology revolutionizing the society.

He suggested to create a website for the members directory so that any member could browse it anytime and update the information relating to them. For the ever changing addresses, undoubtedly this is the most welcome suggestion. Thanks to him, a thorny problem has been resolved.

## RAJARATNAM FAMILY FOUNDATION ( CEYLON ) LIMITED. SCHOLARSHIP FUND.

1 An initial donation of Rs. 165,600/= was received by cheque on 7.1. 2008. This amount has been invested in a fixed Deposit at H.N. B. Wellawatte branch.

2 A further contribution of U.S. dollars 2,000.00 was received by cheque, on 15.6. 08. The proceeds will be deposited in a FDR on realization.

3 The Donors hope to build up the fund up to a total of Rs. 400,000/=

4 Only the income from the investments is to be used to assist a needy student movinf from O/L to A/L at Hartley.

5 The duration of the assistance will be a maximum of two years, from the date of commencement of A/L course.

6. Action has been initiated to make the selection on the afore-stated criteria which includes the need for the student of financial assistance & the performance of the student at the December 2007 O/L. examination.

## PRESENTATION OF Ter-jubilee stamps to NSW Branch.

Mr Chella Padmanathan was away at Australia at the end of the last year & beginning of this year on a private visit to his daughter at Cobar NSW. On the Christmas eve, when he visited NSW, the HCPPA hosted a dinner to him, attended by many Hartleyites with their families.

The PPA NSW made use of the opportunity to discuss funding of drinking water tank & cupboards for the College routed through the Trust, of which Mr Padmanathan is the Secretary. HCPPA NSW has stated that they have sent a sum of Rs. 250,000/= to the Principal for these projects.

Mr Chella Padmanathan at the conclusion of the dinner presented 25 Ter-jubilee stamps to NSW branch which will be used to distribute to Hartlyites & families as prizes at future gatherings.

# Sponsorship

This issue is sponsored jointly by Mr Mahadevan and Mr Sri Shivaya. As all the members are aware the publication of the Newsletter has become an expensive affair , in view of the prohibitive postage charges and escalation of printing paper. Postage charges are beyond any rhyme or reason . However as a service to our Alma Mater , not withstanding any obstacles , the printing of the Newsletter has to continue .

### ஹாட்லிமாணவனுக்கு தங்கப்பதக்கம்

அமெச்சூர் மெய்வல்லுனர் சங்கத்தினால் கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடத்தப்பட்ட தேசிய மட்ட கனிஷ்ட மெய்வல்லமைப் போட்டியில் ஹாட்லிக்கல்லூரி மாணவன் செல்வன் வடிவேல்வரன் ஹரிகரன் 18 வயதின் கீழ்ப்பிரிவில் தட்டு எறிதல் போட்டியில் 1 ஆம் இடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

இவர் கடந்த வருடம் நடைபெற்ற அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லமைப் போட்டியிலும் பங்குபற்றி 17வயதின் கீழ்ப் பிரிவு தட்டு எறிதலில் 2 ஆம் இடத்தை பெற்று வெள்ளிப்பதக்கத்தை பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# Obituary.

1 ) We regret to announce the death of Mr. Manuelpillai, one time English Teacher at Hartley College. Some members of the Executive Committee attended the funeral, and a wreath was placed.

2) Mrs Nagalingam, beloved mother of Mr. Vishnukanthan expired on 24th June and the funeral place at General Cemetry Kanatte on 25th June. Some of the members of the Executive Committee were present at the cemetery to pay their last respect. We express our deepest sympathies to the members of the bereaved family.